**தமிழ்நாடு அரசு**

**சுற்றுச்சூழல் துறை, சென்னை–600 015**

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிறந்த விளம்பரத்திற்கான குறும்படங்களுக்கு விருதுகள் வழங்குதல்**

தமிழகம் முழுவதும் மொத்தம் 8000 பள்ளிகளில் மாவட்டத்திற்கு 250 பள்ளிகள் வீதம் சூழல் மன்றங்களுக்கு 40 முதல் 50 மாணவர்களைக் கொண்டு தேசிய பசுமைப்படை செயல்படுகிறது. மேலும், தமிழக அரசின் நிதியுதவியுடன் 11469 பள்ளிகளில் தமிழ்நாடு முழுவதும் சூழல் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவது சுற்றுச்சூழல் துறையை உருவாக்கியதன் நோக்கங்களில், முக்கியமான ஒன்றாகும். திட்டமிடாத மற்றும் நாகரீகமற்ற செயல்பாடுகள் மனித நலனுக்கும் சூழல் அமைப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதால் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மனதில் ஆழப்பதிய வைப்பது அவசியமாகும். பள்ளி வளாகத் தூய்மை, மரம் நடுதல், விழிப்புணர்வுப் பேரணிகள், ஆண்டுதோறும் குறைந்தபட்சம் ஆறு பசுமை தினங்களை கொண்டாடுதல், மண்புழு உரம் தயாரித்தல், சுற்றுச்சூழல் கண்காட்சி, சுற்றுச்சூழல் போட்டிகள், பிளாஸ்டிக்கிற்கு எதிரான பிரச்சாரம், சூழல் விழிப்புணர்வு குறித்த கலை நிகழ்ச்சிகள், இயற்கை முகாம்கள் போன்ற சூழல் விழிப்புணர்வு பணிகளில், தேசிய பசுமைப்படை மாணவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இருப்பினும், பிரபலமான, நவீன நுட்பங்களும், இலகுவாக சென்றடையக் கூடிய ஊடகங்களின் வலிமையும் முக்கியமானதாகும்

மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் 2018–19 ஆண்டு அறிவிப்பின் படி, பொதுமக்களைச் சென்றடையும் வகையில், உரிய நிறுவனங்களிடமிருந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து நிலம், காற்று, நீர், வனம், தொழிற்சாலை நடவடிக்கைகள், தாவரங்கள், விலங்குகள் உள்ளிட்ட ஏதாவது ஒரு தலைப்பில், பொது ஊடகங்களில் விளம்பரப்படுத்த ஏதுவான தக்க, தரமான விளம்பரப்படங்கள், விளம்பர பட தயாரிப்பு நிறுவனங்கள்/திரைப்பட இயக்குநர்கள்/ திரைப்பட பயிற்சி மையம் மற்றும் திரைப்பட துறையில் அனுபவம் உள்ள தனிநபர்களிமிருந்து குறுந்தகடு(CD/DVD),விரலி(Pen Drive) மூலம் சுற்றுச்சூழல் துறைக்கு 15/12/2018க்குள் வரவேற்கப்படுகிறது.

சிறந்த முதல் மூன்று படங்கள் தேர்வு செய்யப்பட்டு, பரிசுத் தொகையாக முறையே ரூ.7,00 இலட்சம், ரூ.6.00 இலட்சம், மற்றும் ரூ.5.00 இலட்சம் வழங்கப்படுவதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சான்றிதழும் வழங்கப்படும்.

1. விளம்பர விழிப்புணர்வு திரைப்படம், மாநிலத்தின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை பிரதிபலிக்கும் விதமாகவும், சுற்றுச்சூழலை அது தொடர்பான பிரச்சினைகளில் இருந்து பாதுகாக்கும் விதத்தை தெரிவிக்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும்.

2. விருது பெறுவதற்காக பெறப்படும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு திரைப்படங்கள் அனைத்திற்கும் சுற்றுச்சூழல் இயக்குநர் அவர்கள், சட்டபூர்வ உரிமையாளர் ஆவார்.

3. விருது பெறுவதிற்காக பெறப்படும் அனைத்து விழிப்புணர்வு திரைப்படங்களும், தேர்வு செய்யப்பட்டாலும், தேர்வு செய்யப்படவில்லையென்றாலும், அதை தயாரித்தவர்களுக்கு திருப்பி அனுப்பப்படமாட்டாது. அதற்கான கௌரவ வெகுமதியும் வழங்கப்படமாட்டாது.
4. பெறப்பட்ட சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஔிப்படங்களில், திருத்தம் செய்யவோ, மாற்றம் செய்யவோ, சேர்க்கவோ, நீக்கவோ இச்சுற்றுச்சூழல் துறைக்கு உரிமையுண்டு

5. தேவைப்பட்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட விளம்பர படங்களில், சுற்றுச்சூழல் துறையின் வேண்டுகோளுக்கிணங்க, அதன் தயாரிப்பாளர், அதில் சிறு சிறு மாற்றங்களை செய்து கொடுக்கப்பட வேண்டும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட விளம்பர படம், விளம்பரம்படுத்தும் போது, அதில் அதன் தயாரிப்பாளரின் பெயர் திரையிடப்படும். விளம்பர படம் இரண்டு நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்

7. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு திரைப்படங்கள், தயாரிப்பாளரின் சொந்த கரு, கதையம்சம் கொண்டதாக இருக்க வேண்டும். பிற திரைப்படங்களில் கரு, இருப்பதாக பின்னனாலில் புகார் பெறப்படின், அதற்கு தாங்களே பொறுப்பாளியாவர்.

8. ஒருவரே, எத்தனை விழிப்புணர்வு படங்களும் தயாரித்து விருது பெறுவதற்கு அனுப்பலாம்.

9. விழிப்புணர்வு படத்தில் வரும், கதாபாத்திரம், தமிழ்நாட்டில் எவரையேனும் குறிப்பிடும்படியாக இருக்கக்கூடாது.

10. விழிப்புணர்வு விளம்பர படம், தமிழ் மொழியில் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும்.
11. விழிப்புணர்வு விளம்பர படத்தின் கரு, கதையம்சம் அரசின் எந்தவொரு திட்டங்களையும் கேலி செய்யும் விதமாக இருக்கக்கூடாது.

12. விருதுக்கு வரும் விழிப்புணர்வு விளம்பர படங்களை, தேர்வு செய்யும் அதிகாரம், அரசால் அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவிற்கு உண்டு. அக்குழுவின் தேர்வே, இறுதித் தேர்வாகும். தேர்வு செய்யப்பட்ட பின் அதை மறுபரிசீலனை செய்ய கோருதல், கோருவதற்கு இடமில்லை/அனுமதி இல்லை.

13. தேர்வு செய்யப்பட்ட விளம்பர படங்களின் நகல்கள், ஊடகங்கள் இவ்வலுவலக இணையதளம், வலைதளம், மற்றும் ஏனைய அரசு சார்ந்த இணைய தளங்களில் பதிவிறக்கம் செய்யப்படும். மேலும், பள்ளிகளில் நடைபெறும் தேசிய பசுமைப்படை, மற்றும் சுற்றுச்சூழல் மன்ற நிகழ்ச்சிகளிலும் திரையிடப்படும்.

14. மேற்கண்டவாறு தேர்வு செய்யப்பட்ட விளம்பர படங்கள் 15/12/2018 அன்று அல்லது அதற்கு முன்னர் இத்துறையில் பெறப்படவேண்டும்

இயக்குநர்
சுற்றுச்சூழல் துறை
தரை தளம், பனகல் மாளிகை
சைதாப்பேட்டை, சென்னை–600 015
தொலைபேசி– 044–24336421
மின் அஞ்சல் : tndoe@tn.nic.in : Website: www.environment .tn.nic.in

இயக்குநர் சுற்றுச்சூழல் துறை

**Government of Tamil Nadu**

**Department of Environment**

**Environmental Award for Best Tamil Ad-films on Environmental Protection**

Tamil Nadu have 8000 NGC-eco clubs functioning at the rate of 250 schools per district and around 40-50 students enrolled as member per school. Further in Tamil Nadu 11469 eco-clubs are functioning under the state funding. One among the objective for the creation of the Department of Environment is dealing with the task of promoting environmental awareness in the State. Inculcating awareness among students and public on the protection of Environment is very much essential, as several unplanned and un-civilized activities, have created severe damage to the human and the ecosystem around us. The students of Eco-clubs/NGC are involved in disseminating various environmental aspects through awareness programmes such as organizing rallies, human chains, seminars, workshops, tree planting, campus cleaning etc., However making use of the popular latest versatile, easily accessible media power have not yet been captured to reach even the unreached besides lake of motivation advertisement non-capitalization of the skill of the current generation. Moreover, piece meal making of video films found not only expensive but also do not capitalize the talents of the younger generation.

Hon,ble Minister for Environment Announcement 2018-19, to great awareness from public go for Best Advertisement Film contest on Environmental Protection, over any topic/theme on land, air, water, forest, industrial activities, flora, fauna etc., and fit for telecasting in the public media, through advertisement Ad-Films invited from Producer/ Film Director/Institutions/Individual via CD/DVD/PenDrive on or before 15/12/2018.

The Best first three ad-films will be selected and will be given a Cash prize of Rs.7.00 lakhs, Rs.6.00 lakhs & Rs.5.00 lakhs respectively besides certificates by the Hon'ble Chief Minister of Tamil Nadu in an appropriate forum.

1. The ad-film should be produced in the State focusing the environmental related issues of the State.
2. The Director of Environment will have for the legitimate ownership of the ad-films received for awards.

3. The selected and un-selected ad-films for the awards will not be returned to the producers and no royalty will be given.
4. The Department of Environment will have the right to make any change/ modification/ alteration in the ad-films, as deemed fit and necessary, without the consent of the producer.
5. The producer should edit / modify the film, as requested by the Department of Environment, if necessary, if the said film is considered for telecasting.
6. The name of the producer will be indicated while telecasting the ad-film in the public media. The duration of Ad film should not exceed 2 minutes.
7. The theme/ idea/ topic of the ad-film should be of the producer and should not be copied or remake of the others. If any objection or complaint is received, in this regard, it is the liability of the producer to prove the truth that the ad-film is of his own product.
8. One can produce and submit any number of ad-films within the time-limit.
9. The personalities ,if any,in the ad-films should not be controversial person from Tamilnadu
10. The ad-films should be produced in the Tamil language only.
11. The theme/ topic/ idea of the ad-film should not contrary or criticize the Government programmes / polices.
12. A Juries of selection will be formed and the Member of the Juries will select the awardees. The verdict of the members of the Juries is final and any request for reconsideration is not allowed
13. Copies of the ad-films will be hosted in the media ,official websites of Department of Environment and others and also be sent to NGC & Eco-club schools for telecasting in the school functions, prayer meetings, etc.,
14. Ad-Film for the awards should be reach this Directorate on or before 15th December 2018.

Director
Department of Environment
Ground Floor, Panagal Building
Saidapet, Chennai-600 015
Phone-044-24336421
Email: tndoe@tn.nic.in
Wesite: www.environment.tn.nic.in

Director of Environment